# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# ஒரு தேவாலயத்தின் தலைவன் இயேசுவை சந்திக்கிறான்

எழுதியவர் : Edward Hughes
சித்தரிப்பவர் : Byron Unger; Lazarus
மொழிபெயர்ப்பாளர் : Rev. Dr. Dasan Jeyaraj
தழுவியவர் : M. Maillot; Sarah S.

**கதைகள்** 60 **ல்** 41

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*

உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

Tamil

ஒரு நாள் இயேசு தேவாலயத்திற்கு சென்றபோது, ஜனங்கள் தேவனுடைய ஆலயத்தை கனவீனப்படுத்துவதை கண்டார். அவர்களோடு, மாடு, புறாக்களை விற்று, பனமாற்று வேலையை ஆலயத்தில் செய்தார்கள்.



1

கயிற்றினாலே ஒரு சாட்டையை உண்டுபண்ணி, இயேசு அங்கிருந்த விநியோகஸ்தர்களை ஆலயத்திலிருந்து துரத்திவிட்டார்.



2


"இந்த பொருட்களை இங்கேயிருந்து எடுத்துச்செல்லுங்கள்," என்று அவர் கட்டளையிட்டார். "என்னுடைய தகப்பனின் வீட்டை வியாபார ஸ்தலமாக மாற்றாதீர்கள்." இயேசு தன்னுடைய தகப்பனின் வீட்டை சிநேகித்தார்.
3
அங்கிருந்த தலைவர்கள் இயேசு அப்படிச் செய்வதற்கான அதிகாரம் பெற்றவர் என்பதற்கான அடையாளத்தை கேட்டார்கள்.
4
"இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள் மற்றும் அதை மூன்று நாட்களில் எழுப்புவேன்," என்று இயேசு கூறினார். நிச்சையமாக முடியாது! இந்த ஆலயத்தை கட்டுவதற்கு நாற்பத்தாறு வருடமாயிற்று.
5
ஆனால் இயேசுவோ தன்னுடைய சரீரத்தைப் பற்றி சொன்னார். தேவாலயத்தைப்போல, அவருடைய சரீரம் தேவன் வாழுகிற ஸ்தலமாயிருந்தது. இயேசு தான் சிலுவையில் மரிப்பேன் என்றும் மூன்றாம் நாளிலே தேவன் மரணத்திலிருந்து உயிர்ப்பிப்பார் என்றும் அவருக்குத் தெரிந்திருந்தது.
6
இரவிலே, தேவாலயத்தின் தலைவன் ஒருவன் இயேசுவிடம் வருகை தந்தான். அற்புதங்களை பார்த்ததினாலே, இயேசு தேவனால் அனுப்பப்பட்டவர் என்று அவன் அறிந்திருந்தான்.
7
நிக்கோதேமு இயேசுவிடம் வந்து தேவனைப் பற்றி அதிகம் அறிய விரும்பினான்.
8


தேவனுடைய இராஜ்ஜ
யத்திற்குச்செல்ல
ஜனங்கள் மறுபடியும் ப
றக்கவேண்டும்
என்று இயேசு
நிக்கோதேமுவிடம்
சொன்னார்.
9


நிக்கோதேமு
புரிந்துகொள்ளவில்லை.
முதிர்வயதான மனிதன்
எப்படி குழந்தையாக
முடியும்?
மேற்கொண்டு,
அவன் ஒரு
சமய ஈடுபாடு
உடையவனாயிருந்தான்.
இது போதாதா?
10


"ஆவியினாலே பிறப்பது
ஆவியாயிருக்கும்," என்று
இயேசு சொன்னார்.
"தேவனுடைய ஆவியானது
காற்றைப்போலிருக்கிறது.
ஜனங்களால்
காற்றை பார்க்கவோ,
புரிந்துகொள்ளவோ
முடியாது. காற்று என்ன
செய்கிறது என்று
அவர்களால் பார்க்க
முடியாது."
11


இஸ்ரவேல் ஜனங்கள் பல நாட்களுக்கு
முன்னால் மோசேயிடம் முறையிட்டதை இயேசு
நிக்கோதேமுக்கு ஞாபகப்படுத்தினார். "எங்களுக்கு
உணவில்லை, தண்ணீரில்லை, மற்றும் தேவன்
கொடுக்கிற, இந்த மன்னாவை நாங்கள்
வெறுக்கிறோம்," என்று அழுதார்கள்.
12


ஜனங்களுடைய பாவம் தேவனை
கோபப்படுத்தியது. அவர் கொள்ளிவாய்
சர்ப்பங்களை அவர்களுக்குள்ளே அனுப்பினார்.
சர்ப்பங்கள் அவர்களை கடித்தது. அநேகர் இறந்தார்கள்.
13


"நாங்கள் பாவம்
செய்தோம். இந்த
சர்ப்பங்களை எடுக்க வேண்டி
எங்களுக்காக வேண்டுதல் செய்யும்,"
என்று ஜனங்கள் கெஞ்சினார்கள்.
ஆகையால் மோசே அவர்களுக்காக
ஜெபித்தான். ஆனல் தேவனோ
சர்ப்பங்களை எடுக்கவில்லை.
14


ஒரு கொள்ளிவாய் சர்ப்பத்தை
உண்டுபண்ணி அதை ஒரு
கோலிலே வைக்கச்சொன்னார். "யார்
யார் சர்ப்பத்தால் கடிக்கப்பட்டார்களோ
அவர்கள் கோலிலே உள்ள சர்ப்பத்தை
பார்த்தால் உயிரோடிருப்பார்கள்,"
என்று தேவன் வாக்குத்தத்தம்
பண்ணினார்.
15
மோசே பித்தளையினால்
ஒரு சர்ப்பத்தை உண்டு
பண்ணினான் அதை
பார்த்தவர்கள் சுகம்
பெற்றார்கள்.
16
மனுஷ குமாரனும்
அந்தப்பித்தளை
சர்ப்பத்தைப் போல
உயர்த்தப்படவேண்டும்
என்று இயேசு
நிக்கோதேமுவிடம்
கூறினார், ...
17
... சிலுவையிலே
தாம் பாவிகளுக்காக
மரணமடைய
போவதைக்குறித்து
இயேசு
பேசினார்.
18
இயேசு சொன்னார், தேவன்
தம்முடைய ஒரே பேரான
குமாரனை விசுவாசிக்கிறவன்
எவனோ அவன்
கெட்டுப்போகாமல்
நித்திய ஜீவனை
அடையும்படிக்கு, ...
19
... அவரைத்தந்தருளி,
இவ்வளவாய்
உலகத்தில்
அன்பு
கூர்ந்தார்.
20













ஒரு தேவாலயத்தின் தலைவன்
இயேசுவை சந்திக்கிறான்

## தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

## காணப்படுமிடம்

யோவான் 2-3, எண்ணாகமம் 21

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.